Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 05 வியாழக்கிழமை (21-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 256

# இரண்டாம் நாளாக நேற்றும் புளியங்குளத்தில் கடும் சமர்!

## படையினர் முன்னேறும் முயற்சியை தடுத்துவிட்டதாக புலிகள் அறிவிப்பு

வவுனியா, ஒகஸ்ட் 21

புளியங்குளத்தின் மையப்பகுதியை அடையும் முயற்சியாக நகர்வை ஆரம்பித்துள்ள வெற்றி உறுதிப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இரண்டாவது நாளாக நேற்றும் கடுஞ்சண்டை இடம் பெற்றது.

படையினரின் நகர்வு முயற்சியை தாம் தடுத்து விட்டதாக விடுதலைப் புலிகள் நேற்று இரவு அறிவித்தனர்.

நேற்றுக் காலை 6 மணியளவில் ஓமந்தை பழைய வாடிப் பகுதியில் இருந்தும்— நெடுங்கேணி பதியாமடுப் பகுதியில் இருந்தும் — புளியங்குளத்தை நோக்கி படையினர் நகர முற்பட்டபோது மீண்டும் கடும் சண்டை மூண்டது.

படையணிகளை விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் உக்கிர சண்டை இடம்பெற்றதாக களச் செய்திகள் தெரிவித்தன.

இந்த மோதலின் போது படையினரின் ஒரு யுத்த டாங்கியை முற்றாக அழித்ததாகவும், 2 யுத்த டாங்கிகளைச் சேதப்படுத்தியதாகவும் ''புலிகளின் குரல்'' நேற்றிரவு தெரிவித்தது.

நேற்றைய மோதலில் தமது தரப்பில் 19 பேர் வீரமரணமடைந்ததாகவும் ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

அதேநேரம்— நேற்று முழு நாளும் காயம் அடைந்த படையினரை ஏற்றிய அம்பு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றுக்கும் அதிகமான படையினர் பலி என்கிறார் திவயின செய்தியாளர்

வவுனியா, ஓக. 21

செவ்வாயன்று புளியங்குளம் பழைய வாடிப்பகுதியில் நடைபெற்ற சண்டையில், புலிகள் நடத்திய பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் காரணமாக நூற்றுக்கும் அதிகமானபடையினர் கொல்லப்பட்டனர் என்றும், 185 படையினர் காயமடைந்தனர் என்றும் 'திவயின' பத்திரிகையின் செய்தியாளர் ஜினசேன ரத்துக்கமமே பி. பி. சி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

புலிகளின் தரப்பில் 65 போராளிகள் மரணமானதாகவும் —

பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்ததாகவும் — அவர் மேலும் சொன்னார்.

பி. பி. சிக்கு நேற்று இரவு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் மூன்றாம் கட்டம் ஆரம்பித்து இன்று [புதன்] 2 ஆவது நாளாகும்.

பழைய வாடிப் பகுதியிலிருந்து புளியங்குளத்துக்குள் நுழைவதற்கு இராணுவம் முயற்சி எடுத்தது ஆனால் புளியங்குளத்திற்குள் இராணுவம் நுழைவதற்கு விடுதலைப் புலிகள் இடம் அளிக்கவில்லை.

இராணுவம் தனது தரப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 3 யுத்த டாங்கிகளே சேதம் என்கிறது அரசு

கொழும்பு, ஒகஸ்ட் 21

''வெற்றி உறுதி'' நடவடிக்கைத் துருப்பினர் நேற்று முன்தினம் புளியங்குளத்தை நோக்கிய நகர்வை ஆரம்பித்த போது புளியங்குளத்துக்குக் கிழக்கே விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி; துப்பாக்கிகள் சகிதம் தாக்குதல் நடத்தியதில் 3 யுத்த டாங்கிகள் சேதமடைந்தன என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது

புலிகள் பல குழிகளைத் தோண்டி தடைகளை வைத்திருந்த காரணத்தால் யுத்த டாங்கிகளின் செயற்பாடுகள் கிழக்கு முனைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## திருமலையில் கைதானோரில் 16 பேர் விடுதலை

திருகோணமலை, ஓக. 21

யாழ்ப்பாணம் வருவதற்கு கப்பல் வசதியின்றி திருகோணமலையில் விடுதியில் தங்கியிருந்த சமயம் கைது செய்யப்பட்ட 17 பேரில் 16 பேர் திருகோணமலை நீதிவானால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

பொலீஸ் பதிவு இன்றி திருகோணமலையில் தங்கியிருந்ததாகத் தெரிவித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுவாமி பிரேமானந்தாவுக்கு ஆயுள்தண்டனை, அபராதம்

சென்னை, ஓக. 21

கற்பழிப்பு மற்றும் கொலைக் குற்றங்களுக்காக சுவாமி பிரேமானந்தாவுக்கு இரு ஆயுள்தண்டனையும், 66 லட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி அருகே பாத்திமா நகரில் ஆச்சிரமம் நடத்திவந்த பிரேமானந்தா 13 பெண்களைக் கற்பழித்ததாகவும், ஒருவரைக் கொலை செய்ததாகவும் தொடரப்பட்ட வழக்கில் புதுக்கோட்டை மாவட்ட அமர்வு நீதிபதி ஆர். பானுமதி நேற்றுத் தீர்ப்பளித்தார்.

[illegible]

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் சிறையிலிருந்து இருவர் தப்பினர்

கொழும்பு, ஓக. 21

மன்னார் சிறைச்சாலையில் இருந்து இரண்டு விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளார்கள்.

மன்னார் பாதுகாப்பு இணைப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபர்கள் மன்னார்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிபிர் விமானங்கள் மீது ஏவுகணைத்தாக்குதல்!

கொழும்பு ஓகஸ்ட் 21

இஸ்ரேல் தயாரிப்பு இரு கிபிர் விமானங்களை நோக்கி ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அரசு தரப்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

இது குறித்துத் தெரிவிக்கப்பட்டதாவது:-

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு கிபிர் ரக விமானங்கள் முல்லைத்தீவுப் பகுதியில் தமது பணிகளை முடித்துக் கொண்டு புளியங்குளம் ஊடாகத் திரும்பிக் கொண்டிருந்தன

செவ்வாய் காலை 7-58 மணிக்கு இரு விமானங்களும் புளியங்குளத்துக்கு மேல் பறந்து கொண்டிருந்தன

அச்சமயம் பிரதான விமானத்தின் மீது புலிகள் தரையில் இருந்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடமிருந்து இதுவரை அறிவிப்பு எதுவும் இல்லை

லண்டன், ஓக 21

கிபிர் விமானங்களை நோக்கி விடுதலைப் புலிகள் ''ஸ்ரிங்கர்'' ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியதாக வெளிவந்த செய்தி குறித்து விடுதலைப் புலிகளிடமிருந்து அறிவிப்பு எதுவும் இதுவரை வெளிவரவில்லை என்று பி.பி.ஸி. நேற்று இரவு தெரிவித்தது.

விமானங்களைத் தாக்கும் ஏவுகணைகளை புலிகள் பயன்படுத்தி இருந்தால் அது யுத்தத்தில் ஒரு புதிய திருப்பம் என்றும் பி பி ஸி கருத்து வெளியிட்டுள்ளது; (இ-3)

## படையினரின் 10 சடலங்கள் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம்

### மல்லாவியில் புலிகள் ஒப்படைப்பு

வவுனியா, ஓக. 21

புளியங்குளத்தை நோக்கி நேற்று முன்தினம் படையினர் முன்னேற முயன்ற சமயம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரில் 10 பேரின் சடலங்களைக் கைப்பற்றியதாக புலிகள் அறிவித்தனர்.

இவர்களின் உடல்களைப் புலிகள் நேற்று மல்லாவியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளித்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் அச் சடலங்களை எடுத்து வந்து வவுனியாவில் வைத்து படையினரிடம் நேற்று மாலை ஒப்படைத்தனர். (இ-3)

## வெலிகந்தவில் தாக்கு: 7 படையினர் உயிரிழப்பு!

வவுனியா, ஓக. 21

வெலிகந்தவில் மொறகந்த என்னும் இடத்தில் நேற்றுக் காலை 7 30 மணியளவில் வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 7 படையினர் கொல்லப்பட்டனர் என்று ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

உயிரிழந்த படையினரின் 4 சடலங்களையும், ஆயுத தளபாடங்களையும் புலிகள் கைப்பற்றியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் பொலன்னறுவை மாவட்டம், அரலகங்வில பொலீஸ் நிலையத்தில் இருந்து தேடுதலுக்குச் சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 படையினர் கொல்லப்பட்டனர்; 4 படையினர் காயமடைந்தனர் என்று பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-21)

## முல்லைத்தீவில் கிபிர் தாக்குதல்

வவுனியா, ஓக. 21

முல்லைத்தீவுப்பகுதியில் நேற்றுக்காலை 7-10 மணியளவில் கிபிர் விமானங்களின் குண்டு வீச்சுத்தாக்குதல்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-164 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிவிட்டது

இல. 71, நக்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெபோரா தர்ஷினி தொமஸ் என்பவரின் 727520929V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை நக்கா வீதிக்கும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கும் இடையில் தொலைந்து விட்டது.

கண்டெடுத்தவர்கள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் ஒப்படைக்கவும்.

(சி/1354)

அதிர்ஷ்டம் அழைக்கின்றது!

# பொய்யா மொழி ஜோதிடம்

கண்ணூறு, நாவூறு தீரவும், வியாபார விருத்திக்கும் யந்திரங்கள் வழங்கப்படும். மதுவில் மயங்குபவர்களை மறக்கச் செய்ய, கல்வித் தடை, விவாகத் தடை நீங்க ஆலோசனை வழங்கப்படும். ஜாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

(வெள்ளி விடுமுறை)

**ஸ்ரீலஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்**
**ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி,**
**140, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்.**

(49129)

வடமாகாண

# புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த்தடுப்புச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

வட மாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 06-09-1997 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு (பழைய நேரம்) பிலிப்ஸ் வைத்தியசாலை, இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது சங்கப் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல அங்கத்தவர்களையும் தவறாது பொதுக்கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன்,
தலைவர்,
வடமாகாண
புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த்தடுப்புச் சங்கம்.

(சி/1353)

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றும்

**திரு. இ. டானியல் கிருபைராஜா**
அவர்களின் துணைவியார்

## அமரர் ஜீவமணி கிருபைராஜா

அவர்கள் 18-8-97இல் கர்த்தருள் பிரவேசித்தார். அவர்களின் பிரிவையொட்டி துன்புற்றிருக்கும் கணவர், பிள்ளைகள் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை.

(49127)

# ஆறாம் மாத நினைவஞ்சலி

அன்னை மடியில்: 13 — 11 — 1949



அம்பாள் அடியில்: 26 — 02 — 1997

## சின்னத்துரை நடராசா

(பிரபல வர்த்தகர், கொழும்பு)
(நயினாதீவு)

மணிபல்லவ முத்தெனப் பிறந்து
வணிபமும் செய்து பணி பல புரிந்தவா
அணியின் தலையென கடையுமென நம்பினோம்
பணியினை முடித்தாய் பரிதவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
உற்றார், உறவினர்கள்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(49125)

# ஆனந்தியின் மகள் விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 21

கடந்த சனிக்கிழமை லண்டனில் நடந்த கார் விபத்து ஒன்றில் பி.பி.சி தமிழோசை அறிவிப்பாளர் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசத்தின் புதல்வி பூரணி சூரியப்பிரகாசம் உயிரிழந்தார்.

இவரின் இறுதிக்கிரியைகள் இன்று லண்டனில் இடம்பெற இருக்கின்றன.

ஆனந்தியின் இரு புதல்விகளில் இவர் மூத்த புதல்வி ஆவார். (இ-3)

# இருவருக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 21

எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்குக்கு எண்ணெய்விட்ட போது அது பற்றி எரிந்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

கோண்டாவிலில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் படித்துக் கொண்டிருந்த வரான சிவநாதன் ரஜீபன் (வயது 19) விளக்குக்கு எண்ணெய் விட்டவரான ரஜீபனின் சகோதரி சிவநாதன் அனுஷியா (வயது 23) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-15)

# மத்தியஸ்தர் சங்க ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஒன்றுகூடல் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

புதிய சட்டவிதிகள் பற்றி அங்கு விளக்கமளிக்கப்படும் என்றும் —

புதிய அங்கத்தவர்கள் சேர்ந்துகொள்ளலாம் என்றும் — சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

# நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

(ஐ-30)

# அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 21

சாவகச்சேரி கல்விக் கோட்ட அதிபர்களுக்கு 1998 ஆம் ஆண்டுக்கான இலவச பாட நூல் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை பிற்பகல் ஒருமணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் என்று சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் இ. கணேசன்தெரிவித்தார். (இ-3)

# A/L 98

## பொருளியல்

**தேசிய வருமானம்**

by

**திரு. சண்**

ஆரம்பம்: 22-08-1997
காலை 9-00 மணி

**N.C.C.A.**
யாழ்ப்பாணம்.

(47388)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் நடராசா

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி பாக்கியம் நடராசா 20-08-97 அன்று காலமானார்.

இவர் மட்டுவில் தெற்கு சி நடராசாவின் அன்பு மனைவியும், செல்வரத்தினம் (கொழும்பு), இராசரத்தினம் (ஜேர்மனி), நவரத்தினம் (மரக் கூட்டுத்தாபனம்-மட்டக்களப்பு), அரியரத்தினம் (ஜேர்மனி), தவரத்தினம், தேவசகாயம், இன்பராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி புவனேஸ்வரி, திருமதி செல்வமுது, திரு. பே. பாலசிங்கம் (பாலா), திருமதி பத்மாதேவி, திருமதி வசந்தகுமாரி, திரு. நா. சோதிலிங்கம் (வர்த்தகர் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (21-08-97) நண்பகல் 1 மணிக்கு மட்டுவிலில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பே. பாலசிங்கம்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

(49139)

## தம்பிப்பிள்ளை தம்பிராசா

(உரிமையாளர்:
தம்பிராசா எரிபொருள் விற்பனை நிலையம்
நல்லூர் மார்க்கட்)

142, ஆடியபாத வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை தம்பிராசா 20-08-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. தேவகுருநாதன்
(மருமகன்)

142, ஆடியபாத வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(49131)

## பொன்னையா வள்ளிப்பிள்ளை

மூர்த்திவளவு, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னையா வள்ளிப்பிள்ளை அவர்கள் 19-08-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற பொன்னையாவின் (சோதிடர்) அன்பு மனைவியும், காலஞ் சென்ற சந்திரசேகரம் (K. C. W.), சந்திராதேவி, அரிச்சந்திரன், சந்திரயோகச்சந்திரன் (City Medical, Colombo), சந்திரமலர் (பிரான்ஸ்), அற்புதச்சந்திரன் (A. I. வவுனியா), சந்திரறோகினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற தம்பித்துரை (யாழ். மாநகரசபை), ஞானகுருநாதன் (பிரான்ஸ்), அன்னம்மா, தார்சிலா, சசி, வியசாந்தி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஜா, தர்சியா, சனிஸ்டா, நிமல்ரா, றமிலன், றதுந்தன், உதயன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19-08-97 அன்று பிற்பகல் 4-00 மணியளவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
பொ. அரிச்சந்திரன்

T.C ஒழுங்கை,
மானிப்பாய்.

(49113)

## ஆ. சோமசுந்தரம் (சோமையா)

(இளைப்பாறிய பரிசாரகர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆ. சோமசுந்தரம் அவர்கள் 20-8-97 அன்று காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக்கணவரும், சிறி காயத்திரியின் பாசமிகு தந்தையுமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-8-97) வியாழக்கிழமை பகல் 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. பாக்கியம்
(மனைவி)

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

[49124]

## திருமதி சின்னத்தம்பி செல்லம்மா

வல்வெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லம்மா 16-08-97 இல் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் சின்னத்தம்பியின் (வைத்திலிங்கம்) அன்பு மனைவியும், ஞானபூரணரஞ்சிதம் (கொழும்பு), மகேஸ்வரதாசன் (அதிபர், யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்), கலாநிதி (லண்டன்), ஈஸ்வரதாசன் (பொறியியலாளர், லண்டன்), காலஞ்சென்ற குகனேஸ்வரதாசன் ஆகியோரின் அருமைத் தாயாரும், லோகேஸ்வரன் (புகையிரத திணைக்களம், மருதானை), ஞானவேல் (லண்டன்), சுகந்தி (ஆசிரியை), கலாமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காருணியா, கார்த்திகா, சுமித்திரா, வித்தியா ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22-08-97) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. மகேஸ்வரதாசன்
(மகன்)

சைவப்பாடசாலை வீதி,
வல்வெட்டி.

(49126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்.

# அரபு நாடுகள் மீது அரபாத் குற்றச்சாட்டு

காஸா, ஓகஸ்ட் 21

''இஸ்ரேலின் பொருளாதாரத் தடையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன பலஸ்தீனத்துக்கு அரபுநாடுகள் கைகொடுத்து உதவத் தவறிவிட்டன.''

இப்படி பலஸ்தீன அதிபர் யஸிர் அரபாத் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

''சில அரபுநாடுகள் கோடிக்கணக்கான பணத்தை ஆற்றுநீரைப் போன்று அமெரிக்கப் பொருளாதாரத்துக்குள் பாய்ச்சுகின்றன. ஆனால் பொருளாதார நெருக்கடியில் மாட்டியுள்ள பலஸ்தீனத்திற்கு அந்தநாடுகள் கடன்கொடுத்து உதவக் கூட மறந்துவிட்டன'' என்றார் அவர்.

1990 ஆம் ஆண்டு குவைத் மீது படை எடுப்பு நடத்திய ஈராக்கிற்கு அரபாத் ஆதரவு வழங்கியதையடுத்து வளைகுடாநாடுகள் பலஸ்தீனத்திற்கு அளித்து வந்த நிதி உதவியை நிறுத்திக் கொண்டன.

(இ-5)

# ஆண்கள் பாதுகாப்பு மாநாடு!

மும்பாய், ஓக. 21

ஆண்களின் உரிமைப் பாதுகாப்புக்குழு ஒன்று கடந்த திங்களன்று மும்பாயில் மாநாடு ஒன்றை நடத்தியது.

கொடுமைக்கார மனைவிமாரிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான சட்டம் பாதுகாப்பு கணவர்மாருக்கு தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை மாநாட்டின் இறுதியில் முன் வைக்கப்பட்டது.

(இ-5)

# கடும் புயல் மழையால் மணிலாவில் வெள்ளம்!

## தைவான், சீனாவில் பலர் பலி!!

மணிலா, ஓக. 21

'வின்னி' என்று பெயரிடப்பட்ட புயல்மழை நேற்றும் இரண்டாவது நாளாகத் பிலிப்பைன்ஸைத் தாக்கியது.

கடந்த திங்கட்கிழமை தைவானைத் தாக்கிய இந்தப் புயல் காரணமாக 31 பேர் உயிரிழந்தனர்; 13 பேர் காணாமற்போயினர்.

சீனாவில் நேற்று முன்தினம் இப் புயல் மழை காரணமாக 6 பேர் கொல்லப்பட்டனர்; 100 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா நேற்று முன்தினம் வெள்ளக்காடாகக் காட்சியளித்தது. சுமார் 2 லட்சம் மக்கள் தங்களது இல்லங்களிலிருந்து பாதுகாப்பு இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

(ஐ-5)

# பலஸ்தீனத்துக்கு எகிப்து நிதி உதவி

கெய்ரோ, ஓக. 21

எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் பலஸ்தீனத்துக்கு உடனடியாக ஒரு கோடி ரூபா நிதி உதவி வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார்—

பலஸ்தீனத்துக்கான இஸ்ரேலின் தடைகள் நீக்கப்படும் வரை அதன் அடிப்படைத் தேவைகளுக்கு இந்த நிதியுதவி பயன்படும் என எகிப்திய தொலைக்காட்சி தெரிவித்தது.

கடந்தவாரம் ஜெருஸலேமில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களைத்தொடர்ந்து இஸ்ரேல்ஸ்மேற்குக்கரை, காஸா ஆகிய பகுதிகளை மூடியது. பலஸ்தீன அதிகாரத்துக்குக் கொடுக்க வேண்டிய மில்லியன் கணக்கான டொலரையும் அது முடக்கியது.

(ஐ-5)

# உப ஜனாதிபதி இன்று பதவியேற்பு

இந்தியாவின் 10 ஆவது உப ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் கிருஸ்ணகாந் இன்று புதுடில்லியில் நடைபெறவுள்ள ஒரு நிகழ்ச்சியில் உப ஜனாதிபதியாகப்பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்.

ஹைதராபாத்தில் நேற்று அவர் ஆந்திராபிரதேச ஆளுநர் பதவியிலிருந்து விலகினார்.

(ஐ-5)

# உலகில் சிறந்த நகர் சிட்னி

சிட்னி, ஓகஸ்ட் 21

உலகின் சிறந்த நகரமாக ஆஸ்திரேலியாவின்சிட்னிநகர் இந்த ஆண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

ஆஸ்திரேலிய பத்திரிகை ஒன்று எடுத்த கருத்துக் கணிப்பின்படி உலகின் சிறந்த 5 நகரங்களாக சிட்னி, இத்தாலியின் புளோரன்ஸ், றோம், அமெரிக்க ஐக்கிய நாட்டின் சென்பிரான்சிஸ்கோ மற்றும் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் ஆகிய நகரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

(ஐ-5)

# அளவெட்டி மருந்தகக் கட்டடம் விரைவில் புனரமைக்கப்படும்

வலிகாமம் தெற்கு, ஓக.21

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அளவெட்டி அரசினர் மத்திய மருந்தக கட்டடம், பிரசவ விடுதி போன்றவற்றை புனரமைப்புச் செய்வதற்கு அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரகத்தினர் முன் வந்துள்ளனர்.

புனரமைப்புப் பணிகளுக்கென மூன்று இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மருந்தகக் கட்டடம், பிரசவ விடுதி ஆகியன கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன.

(ஐ-152)

# பளைப் பகுதி பாடசாலைகளில் தட்டச்சு பயிற்சி

தென்மராட்சி ஓக. 21

பளைப் பகுதியில் உள்ள பாடசாலைகளை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான தமிழ். ஆங்கில, தட்டச்சு பயிற்சி வகுப்புகள் விரைவில் பளை மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பளை மத்திய கல்லூரியில் தட்டச்சு பயிற்சி வகுப்புக்களை நடத்திவந்த ஆசிரியை இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று இன்னமும் திரும்பி வந்து கடமையைப் பொறுப்பேற்காததால் இப்பயிற்சி நெறியை முழுமையாக கற்க முடியாத மாணவர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து இப்பயிற்சி நெறி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பளை பிரஜைகள் குழுத்தலைவர் முனீஸ்.துரைசிங்கம் தெரிவித்தார்.

(ஐ-117)

## சண்டிலிப்பாய் செயலகப்பிரிவில்

# மேலும் 1,000 குடும்பங்களுக்கு ரூபா 5,000 கொடுப்பனவு

சண்டிலிப்பாய், ஓக 21

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து நான்கு குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவுப்பணம் ரூபா 5 ஆயிரம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இப் பிரிவில் இதுவரை மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவு வழங்கக் கோரி 7 ஆயிரத்து 400 பேர் தத்தமது அலுவலர்கள் ஊடாக விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் ஏற்கனவே 997 குடும்பங்களுக்குகொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது கிடைத்துள்ள நிதியைக் கொண்டு மேலும் ஆயிரத்து நான்கு குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இதற்கு விண்ணப்பித்தவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் தெரிவித்திருந்த வங்கிக்கணக்கில் இக் கொடுப்பனவு வைப்பில் இடப்படும்.

இப்பிரதேச செயலர் பிரிவில் கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் தங்கள் வசிப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து வேறுஇடங்களுக்கு சென்றுவிட்டு மீண்டும் மீளக்குடியேறியுள்ளமாரீசன்கூடல் மாதகல் ஆகியபகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த மீளக்குடியமர்வுக் கொடுப்பனவில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் நா. வேதநாயகம் தெரிவித்தார்.

(ஐ-135)

## யாழ். ஆஸ்பத்திரியில்

# சத்திர சிகிச்சைக்கு அவசியமான உபகரணங்களுக்கு தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைகளத்தில் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சைப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஒட்சிசன் சிலிண்டர்கள், முக்கிய ஊசிமருந்து வகைகள் மற்றும் சில அவசிய உபகரணங்கள் கையிருப்பில் இல்லாததாலேயே சத்திர சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

அவசர சத்திரசிகிச்சைகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

(ஐ-15)

# கிடுகு மற்றும் தென்னம் உற்பத்தி பொருள்களின் பாவனை குடாநாட்டில் பரவலாக பெரும் வீழ்ச்சி!

## பளைப் பகுதியில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிப்பு

பளைப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கிடுகுகள் கொள்வனவு இன்றித் தேங்கி வருவதால் அவற்றின் விலை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் பல கிடுகு பின்னும் தொழில் நிலையங்கள் மூடப்பட்டு நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தொழில்களை இழந்துள்ளன.

கிடுகுகளை பாவித்து வீடுகளை அமைப்பதில் மக்கள் அதிக அக்கறை செலுத்தாததாலும் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்ய வசதி இல்லாத காரணத்தினாலுமே கிடுகு விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் தென்னந்தோட்டங்களில் தென்னை ஓலைகள் மலைபோல அடுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. பல தோட்டங்களில் ஓலைகள் விழுந்த இடத்திலேயே காணப்படுகின்றன.

ரூபா பத்துவரை விற்கப்பட்ட ஒரு சோடி கிடுகு தற்போது ரூபா இரண்டரகை விற்கப்படுகிறது. நல்லரக தென்னம் ஓலை ஒன்று எழுபத்தைந்து சதமாகவும் விற்கப்படுகிறது. முன்னர் தினமும் பத்தாயிரம் சோடி கிடுகுகள் பளைப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டதால் கிடுகு உற்பத்தித் தொழிலினால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பயன் பெற்று வந்தன.

யாழ். குடாநாட்டின் கிடுகுத் தேவைகளுக்கு பளைப் பகுதியிலிருந்தே கிடுகுகள் பெறப்பட்டு வந்தன.

## செய்தி மடல்

தற்போது குடாநாட்டில் கிடுகுகளின் பாவனை குறைந்துள்ளதால் அதன் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது. பல வீடுகளிலும் கிடுகு உற்பத்தி நிலையங்களிலும் ஆயிரக்கணக்கான கிடுகுகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

விலை வீழ்ச்சியடைந்ததையடுத்து பல குடும்பங்கள் தென்னம் ஓலையில் இருந்து ஈர்க்கு பிரித்தெடுத்து அவற்றை சந்தைப்படுத்தி வந்தனர். ஒரு கிலோ ரூபா 35ஆக விற்கப்பட்ட ஈர்க்கு தற்போது கிலோ 12 ரூபாவாக விற்கப்படுவதால் ஈர்க்குகள் கட்டுக்கட்டாக வீடுகளில் தேங்கியுள்ளன.

ஈர்க்கு தயாரிக்கும் தொழில் நிலையங்களில் ஈர்க்குமாறுக்கான தடிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் ஈர்க்குமாறு உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அல்லிப்பளை தொடக்கம் சாவகச்சேரிவரையுள்ள கடற்பகுதியில் தென்னம் மட்டைகள் ([illegible]) ஊறவைக்க முடியாததால் தும்புக் கைத்தொழிலில் ஈடுபட்ட பல குடும்பங்களும் தொழில்களை இழந்துள்ளன.

தும்பு உற்பத்தி குறைந்துள்ளதால் தென்னந்தோட்டங்களில் தென்னை மட்டைகள் மலைபோல குவிக்கப்பட்டுள்ளன. பல தோட்டங்களில் பரவலாகத் தென்னம் மட்டைகள் போடப்பட்டு தீயிடப்படுகின்றன. தும்பு உற்பத்தி குறைந்துள்ளதால் கயிறு, தும்புப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்ட பல குடும்பங்கள் தொழில்களை இழந்துள்ளனர்.

இங்குள்ள தோட்டங்களில் இவ்வருடம் தேங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால் தேங்காயின் விலையும் குறைந்துள்ளது. பல தோட்டங்களில் தேங்காய் விற்க முடியாததால் தேங்காய்களை கொப்பறாவாக மாற்றும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

கொப்பறா உற்பத்திக்கு தேங்காய்கள் பயன்படுத்துவதால் கொப்பறாவில் இருந்து எடுக்கப்படும் சிரட்டைகளும் லட்சக்கணக்கில் தேங்கியுள்ளன.

சிரட்டைக் கரி உற்பத்தி செய்வதில் குடாநாட்டில் ஆர்வம் குறைவாக உள்ளதால் தேங்காய்ச் சிரட்டைகளும் தேங்கியுள்ளன.

மொத்தத்தில் தென்னம் உற்பத்திப் பொருள்கள் அனைத்தினதும் பாவனை குறைந்து காணப்படுவதால் இவைகளின் உற்பத்திகளும் பெரு வீழ்ச்சியடைந்ததுடன் இவற்றை நம்பியிருந்த பல குடும்பங்கள் வருமானம் இழந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னம் உற்பத்திப் பொருள்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ள போதிலும் தென்னம் கள் மட்டும் விலை வீழ்ச்சியின்றி விலை அதிகரித்துச் செல்வதால் பல வீட்டுக்காரர்கள் தென்னை மரங்களை கள் உற்பத்திக்காகக் குத்தகைக்குக் கொடுப்பதைக் காண முடிகிறது.

தென்மராட்சிச் செய்தியாளர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி

## உடுப்பிட்டி, இமையாணன் துவாளி
# ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோயில்

புனராவர்த்தனப் பிரதிஷ்டா

## மகா கும்பாபிஷேகம்

நிகழும் ஈசுர வருடம் ஆவணித் திங்கள் 6 ஆம் நாள் (1997 - 08 - 22) வெள்ளிக்கிழமை காலை 8 மணி 10 நிமிடம் முதல் காலை 9.00 மணி வரையான சுபவேளையில் நடைபெறும்.

மகா கும்பாபிஷேக பிரதமகுரு
''சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு''
''பிரதிஷ்டாலங்கார சித்தாந்தஸாகரம்''
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் (J. P.)**
பிரதமகுரு: ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், வல்வெட்டித்துறை.
தலைவர்: அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை.

சு. செல்லத்துரை
**ஆலய முகாமையாளர்.**

(ஜி/ 1351)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பணியாளர்

## அமரர் சி. மகேந்திரம்


அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி காணிக்கையாகிறது.
அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

தலைவர்,
**நெறியாளர்கள், பணியாளர்கள்.**
**வடமராட்சி கிழக்கு ப.நோ. கூ. சங்கம்,**
**மருதங்கேணி.**

தற்போதைய முகவரி:
உபயகதிர்காமம்,
புலோலி.

(49118)

# 31 ஆம் நாள்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன அழைப்பும்



| மலர்வு; | உதிர்வு; |
|---|---|
| 1 | 23 |
| — | — |
| 03 | 07 |
| — | — |
| 1933 | 1997 |

அமரர்

## செல்லையா கந்தசாமித்துரை
**(கட்டியப்பா)**

மறைந்த அன்புத் தாயால் தங்கக் கட்டியென்றும் உற்றவர்களால் கட்டியப்பா என்றும் அன்பாக அழைக்கப்பட்ட எம் அன்புக்கினியவரே! எவ்வாறு இரண்டாவது தடவையும் இக் கொடிய புற்றுநோயால் ஆளாக்கப்பட்டீர்கள். இக்கொடிய புற்று நோயிலிருந்து மீண்டு விட்டதாக புத்துயிர்ப்புடன் இச் சித்திரைப் புத்தாண்டில் அறிவித்தது எப்படி? மேலும் இக் கொடிய நோயின் வேதனையிலும் றோஜாப்பூவின் மென்மையான புன்னகையை உதிர்த்ததெப்படி? வாழ்ந்த இடம், நண்பர்களுடன் கூடிக்குளாவிப் படித்த இடம், இவற்றைப் பிரிந்து செல்வதற்காக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காத்திருந்த வேளையிலும் நோயைப்பற்றி அலட்டிக்கொள்ளாது பசுமையான பழைய எண்ணங்களை அன்பு மகனுடன் பரிமாறிப் பூரித்த மனம் எப்படி வந்தது? உதிர முன்பும் கவர்ச்சி காட்டும் றோஜாவைப் போன்றதா உங்கள் இளகிய மனம். உங்கள் பிரிவால் வேதனையில் தவித்திருக்கும் நாம் உங்கள் பிரியமான றோஜா மலர்களை ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனை வேண்டி காணிக்கையாக்குகின்றோம்.

22-08-97 (வெள்ளிக்கிழமை) அன்று நிகழும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் தவறாது பங்கு பற்றும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்களை தாழ்மையோடு கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
மகன் க. ரகு

34, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

(49116)

# சமய சந்திகளில்

சுருவில் பூர்ணா புஷ்கலா தேவி சமேத ஹரிஹரபுத்திர ஐயனார் கோயிலின் அந்தரீத பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.05 மணி முதல் 9.05 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய மகா கும்பாபிஷேக கர்மாரம்ப கிரியைகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின.

இன்று எண்ணெய்க்காப்பும், நாளை மகா கும்பாபிஷேகமும் நடைபெறும்.

★ ★ ★

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி கோயில் மஹோற்சவத்தின் தேர் உற்சவம் இன்று காலை 8.00 மணிக்கும், தீர்த்தோற்சவம் நாளை காலை 9.00 மணிக்கும் நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

அனலைதீவு அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் மகா கணபதிப் பிள்ளையார் கோயில் ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன பிரதிஷ்டா திருக்குடத் திருமஞ்சன மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதனை ஒட்டி இன்று வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும். (ஐ-111)

★ ★ ★

கொழும்புத்துறை மணவியம்பதி அருள் மிகு ஸ்ரீ அம்மன் - ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். (ஐ - 30)

## உடுவில் கோட்ட முன்பள்ளி ஆசிரியருக்கு

உடுவில் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தத்தம் சுய விவரங்களுடன் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் கல்விக் கோட்டத்தில் தம்மை சந்திக்குமாறு கல்வி அதிகாரி ஆ. தற்பரானந்தன் தெரிவித்துள்ளார். (ஐ-142)

## பாம்பினால் கடியுண்ட இருவர்

யாழ்ப்பாணம் ஒக. 21 பாம்பினால் கடியுண்ட இருவர் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். உடும்பிராய் வடக்கில் இருந்து சுப்பிரமணிய ம்பரா சக்தி வயது (55) என்பவரும்—உடுவிலில் இருந்து கந்தையா ஸ்ரீஸ்காந்தராசா (வயது37) என்பவருமே பாம்புக்கடிக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்கள். (ஐ-15)

உடுப்பிட்டி

## அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## ஒன்பதாவது வருடாந்தப்
# பொதுக்கூட்ட அறிவித்தல்

**தலைவர்:** Dr மு. தங்கராசா B. Vst, M. Sc.
**காலம்:** 24-08-1997 ஞாயிறு மு. ப. 9-30மணி (புதிய நேரம்)
**இடம்:** உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பேராசிரியர் அ. துரைராசா ஞாபகார்த்த மண்டபம்

அன்றைய தினம் எம் முன்னைய அதிபர் அமரர் திரு. S. றொபேட் நவரத்தினம் அவர்களின் நிழற்படம் திரைநீக்கம் செய்யப்படும். சகல அங்கத்தவர்களும் தவறாது சமூகம் அளித்துச் சிறப்பிக்கவும்.

செயலாளர்,
**பழைய மாணவர் சங்கம்,**
உடுப்பிட்டி, அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

(49099)

# 20 ஆம் அண்டு நினைவஞ்சலி



| உதயம்: | அஸ்தமனம்: |
|---|---|
| 06 | 21 |
| — | — |
| 01 | 08 |
| — | — |
| 1911 | 1977 |

திருமதி

## தெய்வானைப்பிள்ளை சபாநாயகம்

ஆண்டுகள் இருபது சென்றாலும்
அணைந்தும் அணையாத தீபமாய்
எம் உள்ளத்தில் ஒளிரும் எம்
அருமை அம்மாவே!
என்றும் எமக்கு நல்வழி காட்டுவீராக.

உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.

(ஜி - 1341)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் ஆவணித்திங்கள் 7 ஆம் நாள் (23-08-97) சனிக்கிழமை பகல் 11. 10 மணிமுதல் 12. 40 மணி வரையுள்ள அஸ்வினி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**திவாகரன்**
**[கரன்]**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சுஜாதா**
அவர்களுக்கும்

தெல்லிநகர் ஸ்ரீ துர்க்காதேவி துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்: Gemeinschaftzentrum Seebach, Hertensteinerstr, 20, 8052 Zurich Switzerland.

இருவீட்டார் அழைப்பு

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:

**திருமதி கந்தையா இராசமலர்**
பாவலர் துரையப்பா வீதி,
தெல்லிப்பழை.

**திருமதி ஆறுமுகம் புவனேஸ்வரி**
மணியம் வீதி,
தெல்லிப்பழை.

வரவேற்பாளர்கள்:

திரு. க. பாஸ்கரன்
திரு. திருமதி திருலோகநாதன்
திரு. க. பத்மநாதன்

திரு. திருமதி புவனச்சந்திரன் (கனடா)
திரு. திருமதி புவனரவீந்திரன் (கனடா)
திரு. திருமதி புவனரஞ்சன் (டென்மார்க்)

தகவல்: க. ரவிகரன்
இல. 17, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[49115]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை நரம்பு சத்திர சிகிச்சைப் பிரிவு
# ஆஸ்பத்திரியில் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 21
யாழ். போதனா வைத்திய சாலையில் நீண்டகாலமாக இயங்காதிருந்த மூளை நரம்புச் சத்திர சிகிச்சைப்பிரிவு விரைவில் மீண்டும் இயங்கத் தொடங்கவுள்ளது.

இதற்கான துரித நடவடிக்கைகள் வைத்தியசாலை நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பிரிவில் பணியாற்றுவதற்காக மூளை நரம்புச் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் கொழும்பில் இருந்து கடந்த மூன்று நாள்களுக்கு முன் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வந்து சேர்ந்துள்ளார்.

இவரின் வருகையை அடுத்து இப்பிரிவிற்கென ஒதுக்கப்பட்ட ''வார்ட்டும்'' திருத்த வேலைகள் முடிவடைந்து இயங்குவதற்கான ஆயத்தத்துடன் வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒரிரு தினங்களில் இப்பிரிவு செயற்படத் தொடங்கும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் நீண்ட காலமாக இப்பிரிவு செயற்படாததால் மூளை மற்றும் மூளை நரம்பு தொடர்பான சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய வடபகுதி நோயாளர்கள் இங்கிருந்து கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தனர்.

கொழும்பு செல்ல வசதியற்ற பலர், இச்சிகிச்சையை மேற்கொள்ள முடியாது மரணத்தைச் சந்தித்துள்ளனர்.

தற்போது வருகை தந்துள்ள மூளை நரம்பு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் குணானந்தன் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்றுவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் பயிற்சி பெறும் யாழ். மருத்துவ பீட மாணவர்களுக்கும் மூளை, நரம்பு நோயியல் சம்பந்தமான பயிற்சிகளை அவர் வழங்குவார் எனத் தெரிவிக்கப்பட்டது.
(ஐ-15)

## தகாத நடவடிக்கையில் ஈடுபட்ட 8 பாடசாலை மாணவர்கள் கைது!

### கல்கிசைக் கடற்கரையில் சிக்கினர்

கொழும்பு, ஒக. 21
பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு கல்கிசைக் கடற்கரையில் உள்ள குடில்களில் தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 8 இளம் மாணவ மாணவியரைக் கல்கிசைப் பொலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டபோது இந்த ஜோடிகளிடம் பாடசாலைப் புத்தகங்களும், குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களும் இருந்தனவாம்.

இந்த மாணவ ஜோடிகளின் செயல் குறித்து அப்பகுதிப் பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்தே பொலீசார் அவர்களைக் கைது செய்தனர்.
(ஐ-10)

## பாடசாலைகளில் பற்சிகிச்சை நிலையங்கள்

நல்லூர், ஒக. 21
வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தேசியபாடசாலைகளில் பற்சிகிச்சை நிலையங்களை அமைக்க வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி பற்சிகிச்சை நிலையங்கள் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் இயங்கும்,
(ஐ-103)

## சிறப்புற நடந்த சின்னமடு மாதா திருநாள்

நெடுந்தீவு, ஒக. 21
கத்தோலிக்க மக்களின் முக்கிய யாத்திரைத் தலமாக விளங்கும் ஊர்காவற்றுறை சரவணை சின்னமடு மாதா கோயில் வருடாந்த திருநாள் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த ஏழு வருடங்களின் பின் இடம்பெற்ற திருநாள் உற்சவத்திற்கு வடபிரதேச பஸ் போக்குவரத்துச் சபை விசேட பஸ் சேவைகளை நடத்தியது.

திருநாள் திருப்பலிப்பூசைகளை வண. பிதா ஜே. பீ. ஈ. செல்வராஜா அடிகளார் ஒப்புக் கொடுத்தார். இம்முறை நடைபெற்ற திருநாள் திருவிழாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.
(ஐ-111)

## யாழ். நிலைவரம் குறித்து வெளிநாடுகளுக்கு அறிக்கை

### இணையம் அனுப்புகிறது

குருநகர், ஒக. 21
யாழ்ப்பாண நிலைவரம் தொடர்பான மாதாந்த அறிக்கை யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் தயாரிக்கப்பட்டு கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் ஊடாக வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் ஆர். பரமநாதன் இத் தகவலைத் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையில் நடைபெற்ற யாழ். பத்திரிகையாளர் சங்கக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆரம்பிக்கப்பட்டு ஏழு வருடங்கள் பூர்த்தியடைந்து விட்டன என்றும் அவர் தெரிவித்தார்.
(ஐ-5-51)

## தோத்திர நூல் வெளியீடு

வலிகாமம் தெற்கு ஒக. 21
இணுவில் இந்து சமய வளர்ச்சி சங்கத்தின் ஆதரவில், விநாயகர், முருக கடவுள் பாடல்கள் அடங்கிய பன்னிரு திருமுறை தோத்திர திரட்டு நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் கந்தசாமி கோயில் மண்டபத்தில் யாழ். பல்கலைக் கழகநுண்கலைப் பீட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் வெளியீட்டுரையினை ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரமும் தொகுப்புரையை பண்டிதர். வ. பேரின்பநாயகமும் நிகழ்த்துவர்.
(ஐ-152)

## நூல் வெளியீடு

சண்டிலிப்பாய், ஒக. 21
அளவெட்டி ஸ்ரீ நாக வரத நாராயணர் ஆலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமையன்று நடைபெறவிருக்கும் இரதோற்சவத்தின் போது ''ஸ்ரீ நாகவரத நாராயணர் அருட்புகழ்'' எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

அருட்கவி விநாசித்தம்பி எழுதிய இந் நூலை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் வெளியிட்டு வைப்பார். (ஐ-135)

## இலவச ஆங்கில வகுப்பு

வலிகாமம் தெற்கு, ஒக. 21
தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆதரவுடன் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தில் இலவசமாக ஆங்கில பாடவகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

ஆறுமாத காலங்களுக்கு இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

சுமார் 35 இளைஞர்களும் யுவதிகளும் இப்பயிற்சி நெறியில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சி பெற்றவர்களுக்கு பயிற்சி முடிவில் பரீட்சைகள் நடத்தப்பட்டு சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.
(ஐ-152)

## கைகலப்பில்
## 25 கிரிக்கெட் ரசிகர்களும் 7 பொலீஸாரும் காயம்

கொழும்பு, ஒக. 21
கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பிரேமதாச விளையாட்டரங்கில் இலங்கை இந்திய அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியைக் கண்டு களிக்க வந்த ரசிகர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் 25 ரசிகர்களும் 7 பொலீஸாரும் காயமடைந்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

கைகலப்புக்கான காரணம் தெரிய வரவில்லை. [இ-10]

## ஆங்கில தகுதிகாண் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக 21
பலாலி ஆசிரியர் கலாசாலை? — பண்டத்தரிப்பு? 

பஸ்துன்ரட்டை கல்விக் கல்லூரி அனுமதிக்கான ஆங்கில தகுதிகாண் பரீட்சை 1997 எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறும்.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்ற பரீட்சார்த்திகளுக்கு இம்மாதம் 21 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடக்கும் என்று தெரிவிக்கப்படிருந்தது.

இதே அனுமதி அட்டைகளுடன் மேற்படி பரீட்சைக்கு தோற்ற முடியும் என்று கல்வி உயர் கல்வி அமைச்சின் கல்விக் கல்லூரிகள் கிளையின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பி. இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். [இ-4]

## விற்பனை நிலையம்

நெடுந்தீவு: ஒக. 21
நெடுந்தீவு கிழக்கு, தொட்டாரப் பகுதிகளில் மக்கள் நலன் கருதி நெடுந்தீவு பல நோ.கூ. சங்கம் தீர்த்தக் கரைப்பகுதியில் புதிய விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது.

நெடுந்தீவு பல நோ.கூ. சங்கத்தலைவர் கே.கோபால சிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் புதிய கிளையைத் திறந்து வைத்தார்.
(இ-111)

## தலைமன்னாரில் 12 தமிழக மீனவர் கைது

தலைமன்னாருக்கு அருகே மூன்று வள்ளங்களில் வந்த 12 தமிழக மீனவர்கள் இலங்கைப் படையினரால் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டனர்.

தலைமன்னார் பொலீஸாரிடம் மேல் விசாரணைக்காக அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

புலிகளுக்கு பொருள்களை விநியோகிப்பதற்காக — அல்லது இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியாவுக்கு ஏற்றிச் செல்லும் நோக்குடன் — அவர்கள் இலங்கை கடற்பகுதிக்கு வந்திருக்கலாம் என படை வட்டாரங்கள் தெரிவித்தன.
(உ-21-164)

காணாமற்போனோர் தொடர்பான
# நான்கு கட்ட விசாரணைகளிலும் இதுவரை முன்னேற்றம் இல்லை

யாழ்ப்பாணம், ஒக. 21
யாழ். குடாநாட்டில் காணாமற் போனவர்கள் சம்பந்தமாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சு விசாரணைக்குழு முன் இதுவரை 369 பேர் வாக்கு மூலமளித்துள்ளனர்.

பந்துல குலதுங்க தலைமையிலான இந்த விசாரணைக் குழு பலாலியில் இதுவரை நான்கு தடவைகள் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. இந்த நான்கு தடவையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 369 பேர் பற்றியும் எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று விசாரணை நடவடிக்கையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனவரி மாதம் முதன் முதலாக விசாரணைகள் நடைபெற்ற போது 60 பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர், அவர்களில் 57 பேர் சமுகமளித்திருந்தனர். மூன்று நாள்கள் இந்த விசாரணை நடைபெற்றது.

இரண்டாவது தடவையாக 60 பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 52 பேர் சமுகமளித்து வாக்குமூலமளித்திருந்தனர். இந்த விசாரணைகள் 3 நாள்கள் நடைபெற்றன.

மூன்றாம் தடவையாக 200 பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அதில் 143 பேர் வாக்கு மூலமளித்தனர். 4 நாள்கள் விசாரணைகள் நடைபெற்றன.

இறுதியாக கடந்த வாரம் பலாலியில் 5 நாள்கள் விசாரணைகள் நடைபெற்றன. இதன் போது 360 பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களில் 117 பேர் மட்டுமே விசாரணைக்கு சமுகமளித்தனர்.
(ஐ-5)

## சிறுவனின் கால் பாதம் துண்டிப்பு

சரிந்து விழுந்த மின்கம்பத்தினுள் அகப்பட்டு கால் பாதம் சிதைவுண்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுவனுக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை பலனளிக்காததால் அவனது வலது கால் பாதத்துடன் துண்டிக்கப்பட்டது.

மானிப்பாய் கட்டுடையில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிவலிங்கம் கபில்ராஜ் (வயது 7) என்ற சிறுவனின் கால் பாதமே சத்திர சிகிச்சையின் போது அகற்றப்பட்டது.

தறித்துக்கொண்டிருந்த வேளை திடீரெனச்சரிந்து விழுந்த மரம் ஒன்று மின்கம்பத்தின் மேல் விழுந்து அதனால் மின்கம்பம் சரிந்து விழுந்ததும். அவ்வேளை கடைக்குச் சென்ற பிரஸ்தாப [illegible] படுகாயமடைந்ததும் தெரிந்தது.
(ஐ-15)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவரான யாழ்ப்பாணம் மதியூஸ் வீதியைச் சேர்ந்த அருளானந்தம் இம்மானுவேல் (வயது 45) என்பவரும் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த கச்சேரியடியைச் சேர்ந்த காசித்தம்பி சுப்பிரமணியம் (வயது 46) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
(ஐ-15)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஒக. 21
மருதனார்மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 58 ஆவது ஆண்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு பரிசுத்த நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகி நடைபெறும்.
(ஐ-4)

## பாராட்டு விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர், இறைபணிச் செம்மல் சு. விநாயகரத்தினத்தின் அறுபதாவது அகவையொட்டி பாராட்டு விழா ஒன்றை எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்த உள்ளனர்.

இணுவில் கிழக்குப்பகுதியில் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் காலை 9.30 மணியளவில் நடைபெறும் இவ்விழாவில் உடுவில் கல்விக்கோட்ட கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் உட்படப் பலர் பாராட்டுரை வழங்குவர்.
(ஐ - 152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் புகையிரத நிலைய ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீட்டை உள்ளடக்கிய 6 பரப்புக் காணியும், கண்டி வீதி, சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியில், '20' பரப்பு மேட்டுக் காணியும், பகுதியாகவோ, ஒருமித்தோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஞா. குமாரசாமி, காளிகோயிலடி, டச்சு வீதி, சாவகச்சேரி. [49087]

பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஆண்டு 3 முதல் O/L வரை ஆவணி மாத பயிற்சிகள் எம்மிடம் பெறலாம். பரீட்சைப் பகுதி, BOND Institutes யாழ்ப்பாணம். [49114]

YASHICA, FX- 7 கமரா உடன் விற்பனைக்கு உண்டு. வெள்ளி, சனி நேரில் வரவும். தொடர்பு: இல 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர். [49117]

## பட்டதாரிகள் விவரம் சேகரிப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளின் விவரங்களை யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் சேகரித்து வருகிறது.

இத்தகையோர் தங்கள் சுய விவரங்களை யாழ் நகர பஸ் நிலையப் பகுதியில் நவலேன்ஸ்கட்டடத்தில்தற்காலிகமாக இயங்கும் சங்கப் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் சி. இளங்கோ தெரிவித்துள்ளார். (ஐ)

**BOSCO INSTITUTE**
25, றக்கா றோட்,
ஆண்டு 98 - க்கான
புலமைப் பரீட்சை
பயிற்சி வகுப்புகள்
**ஆரம்பம்:**
30-8-97 காலை (10-12)
தமிழ் ஆங்கில தட்டச்சு வகுப்புகள் நடைபெறுகின்றன,
(49120)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் N. சின்னத்தம்பி**
(உடுவில்)
(கட்டடக்கலைஞரும், ஒப்பந்தக்காரரும்)

அன்னை மடியில்: 01 08–1917
ஆண்டவன் அடியில்: 22–07–1997

மறவோமே எந்நாளும்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென
ஆன்றோர் சொன்னதெல்லாம் மறப்போமா?
அன்புடன் பாசமும் பரிவும் கலந்தெம்மை
இன்புடன் வளர்த்த கதை — மறப்போமா?
நேர்மையின் பிறப்பிடமாய் நீதியின் இருப்பிடமாய்
நேர்வழி வாழ்ந்து, வாழ் என்றாய் — மறப்போமா?
இறைவனே எம் தந்தை அவனேயாவுமென
நிறை பெற்று வாழ்ந்திரே மறப்போமா?
மறவோமே எந்நாளும்.

உங்கள் ஆன்மா சாந்தி பெற எல்லாம் வல்லோனை வேண்டுகிறோம் ஐயா.

திரு. N. சின்னத்தம்பி 22-07-97 இல் காலமாகியதை அறிந்து அவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (21-08-97) நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையில் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி - சின்னத்தம்பி தங்கம்மா
தியாகராசா, தேவிமலர் (வேபி),
தவமணிதேவி (ராணி), றோசன் (அமெரிக்கா),
தேவகுமாரி (லீலா), மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(49080)

சாவகச்சேரி
கோயில் குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம்
ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி கோயில்
புனராவர்த்தன பஞ்ச குண்டபக்ஷ
## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியை ஆரம்பம்: 20-08-97 புதன்கிழமை
எண்ணெய்க் காப்பு: 21-08-97 வியாழக்கிழமை
மகா கும்பாபிஷேகம்: 22-08-97
வெள்ளிக்கிழமை
காலை 8. 05- - 9 05 வரையுள்ள
சுபவேளையில் நடைபெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(சி- 1352) -பரிபாலன சபை.

**D. M. I.** 233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[முன்பு இயங்கிய இடம்]
**கணக்கீடு A/L 98**
பிரத்தியேக வகுப்பு
ஆரம்பம்: 30-08 97 சனிக்கிழமை காலை 8 மணி
(புதிய நேரம்)
ஆசிரியர்: D SAM

குறிப்பு:
★ அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.
★ இரண்டு பிரிவுகள் மட்டுமே நடைபெறும்.
★ முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
★ அலகு 1 உடன் கிரயக்கணக்கீடும் ஆரம்பமாகும்.

(சி/1350) D. SAM

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 01 – 04 – 1954
ஆண்டவன் அடியில்: 24 – 08 – 1994

**திருமதி சந்திரவதனி சண்முகானந்தா**
(வதனா)
(ஆசிரியை, யா/ வீமன்காமம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை)
**திதி: 21 - 08 - 1997**

உங்கள் திடீர்ப் பிரிவு இன்றுடன் ஆண்டுகள் மூன்று உருண்டோடி விட்ட போதிலும் உங்கள் நினைவு எமது நெஞ்சை விட்டகலாது பசுமையாகி விட்டதம்மா.

கணவன், மகன் மேல் வைத்த பாச உணர்வு, கருணை எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் எமது மனதில் அன்று போல் இன்றும் வீற்றிருக்கிறீர்கள் அம்மா.

உற்றார், உறவினர், சகோதரிகள் மேல் வைத்த பற்று, பாச உணர்வு என்றும் எல்லோர் மனதிலும் மேலோங்கி நிற்குதம்மா.

இவையாவற்றுக்கும் மேலாக எமது பாசம் எப்பிறவியிலும் மாறாதம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய உடுவில் சிவஞானப் பிள்ளையாரினதும், சுன்னாகம் கதிரமலை சிவனினதும் திருவருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கணவன்: சண்
மகன்: அகிலன்
சகோதரிகள்: மாலினிதேவி (U. K)
கலாவாணி (U. K)
நடராசா மாமா, உற்றார், உறவினர்.

க. பா: சண்முகானந்தா,
"சர்மிலம்"
இலங்கை வங்கி ஒழுங்கை,
சுன்னாகம்.
(39042)

## 8 ஆம் வருட நினைவஞ்சலி







| | | |
|---|---|---|
| அமரர் | அமரர் | அமரர் |
| கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ் | கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன் | நாகமணி தில்லைநாதன் |
| உதிப்பு: 14 – 01 – 1958 | உதிப்பு: 22 – 03 – 1962 | உதிப்பு: 30 – 03 – 1959 |
| அழிப்பு: 21 – 08 – 1989 | அழிப்பு: 21 – 08 – 1989 | அழிப்பு: 21 – 08 – 1989 |

**திதி: 22 - 08 - 1997**

சேர்ந்து வாழ்ந்தீர்கள் சேர்ந்தே போனீர்கள்
ஆய்ந்து பார்க்கிறோம் ஏதும் அறியவில்லை புரியவில்லை;
உங்கள் நெஞ்சத்து எண்ணங்கள் என்றும்
நிலையான பொற்சித்திரங்கள்
மறக்கவே முடியாது என்றும் மாறாதே எம் துயரம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

வத்தளை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை,
(49093)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வீணாகிய 3 வருடங்கள்

கடந்த பத்து வருட காலத்தில் முதல் தடவையாக நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கூட்டம் கோரம் இல்லாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

சபையை நடத்துவதற்குத் தேவையான எம்.பிக்கள் சபையில் இல்லாது போகவே சபாநாயகர் சபைக் கூட்டத்தை ஒத்தி வைக்க நேரிட்டது.

அரசு பதவிக்கு வந்து மூன்றாண்டு காலம் நிறைவேறியும் அது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததையும் -

அரசின் அநீதியான ஆட்சியையும் — கண்டித்தே ஐக்கிய தேசியக் கட்சி எம்பிக்கள் இந்த வெளி நடப்பைச் செய்தனர்,

ஆனால் அரச தரப்பு எம்.பிக்கள் கூட்டத்தில் போதிய அளவு கலந்து கொள்ளத் தவறிய சந்தர்ப்பத்தில் இந்த வெளிநடப்பு இடம்பெற்று கோரம் இல்லாமல் நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதுபொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிப்பீடமேறிய மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில் நிகழ்ந்த ஒரு துரதிர்ஷ்ட சம்பவம் என்றே கூற வேண்டும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவி ஏற்று மூன்று ஆண்டுகள் பூர்த்தி அடைந்ததையொட்டி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் பொதுமக்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தார். இந்த நிகழ்ச்சிக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வானொலியிலும், தொலைக்காட்சியிலும் கேள்வி-பதில்கள் ஒலி, ஒளிபரப்புச் செய்யப்பட்டன;

ஜனாதிபதியின் பதில்களில் இருந்து ஒன்று நன்றாகத் தெரிகிறது.

அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முக்கிய தடைக்கல்லாக இருப்பது வடக்கு — கிழக்கு யுத்தமே.

பாண் விலை குறைப்புத் தொடக்கம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு வரை எந்த வாக்குறுதியுமே இது வரை நிறைவேற்றப்படவில்லை.

அரசின் பதவிக்காலத்துக்கு இன்னும் இரண்டு வருடங்கள்தான் இருக்கின்றன.

கடந்த மூன்று வருட காலத்தில் சாதிக்க முடியாததை அடுத்த இரண்டு வருடகாலத்தில் சாதிக்க முடியுமா என்பது இன்று எழும் முக்கிய கேள்வி.

விடுதலைப் புலிகளின் ஆதரவு கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி தீர்வுத் திட்டத்தை எப்படியும் அமுல் செய்தே தீருவேன் என்று ஜனாதிபதி தொலைக் காட்சியில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்துள்ளார்.

தீர்வுத்திட்டத்தை அமுல் செய்வது மூலம் வடக்கு — கிழக்கு யுத்தத்தை நிறுத்த முடியும் என்றால் ஜனாதிபதியின் நடவடிக்கை பாராட்டுக்குரியதே.

தீர்வுத்திட்டத்தை அமுல் செய்தும் யுத்தம் தொடருமானால் முதல் மூன்று வருடங்கள் போன்றே இனி வரும் இரண்டு வருடங்களும் வீணே கழியப் போகின்றன.

# அனுப்பப்பட்ட கடிதங்களில் பல உரியவரைச் சென்றடையவில்லை

## விசாரணைக்கு சமுகமளிக்காதது இதுவே காரணம்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். குடாநாட்டில் காணாமற்போனவர்கள் சம்பந்தமாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு முன் கடந்தவாரம் சாட்சியமளிக்க யாழ். செயலகம் மூலம் முறைப்பாட்டுக்காரர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் பல உரியவர்களுக்கு கிடைக்கவில்லை.

உரியவர்கள் குறிப்பிட்ட முகவரியில் இல்லாத காரணத்தால் செயலகத்துக்கு அக் கடிதங்கள் திரும்பி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் மூலமும் —

சர்வதேச மன்னிப்புச்சபை, ஐ. நா. சபை, வத்திக்கான் போன்றவற்றின் மூலமும் —

நேரடியாகவும் — தமது முறைப்பாடுகளைத் தெரிவித்திருந்தும் விசாரணைகளில் பங்குபற்றாதவர்கள் யாழ். செயலக பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் ம. சுதிர்காமநாதனுடன் தொடர்பு கொண்டு எழுத்து மூலம் இது பற்றி அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் முறைப்பாடுகளை தெரிவித்தவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக முகவரி மாற்றங்கள் போன்ற மாற்றங்களை யாழ். செயலக நலன் புரிக் கிளைக்குத் தெரியப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## உள்ளூராட்சித் தலைவர்கள் கூட்டம் தனிச் சிங்களத்தில்

கொழும்பு, ஓக. 21

சுதந்திரப் பொன் விழா ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய உள்ளூராட்சித் தலைவர்களுக்கு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட கூட்டம் தனிச் சிங்களத்தில் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா தமது அமைச்சு அலுவலகத்தில் கூட்டிய இக் கூட்டத்தில் நாட்டில் இருந்து ஏராளமான உள்ளூராட்சித் தலைவர்கள் பங்குபற்றினர்.

கூட்ட நடைமுறைகள் யாவும் சிங்கள மொழியிலேயே இடம் பெற்றன.

கூட்டத்தில் பங்குபற்றிய திருகோணமலை நகர சபைத் தலைவர் சூரியமூர்த்தி இந்த செயற்பாட்டைக் கண்டித்துப் பேசினார். (இ-150-3)

## நிதி உதவி

தென்மராட்சி, ஓக. 21

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் கனகலிங்கம் விமல்ராஜ் என்னும் குழந்தையின் உயிர்காக்கும் சேவைத் திட்டத்திற்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம், சாவகச்சேரி லியோ கழகம், சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் ஆகியன 16 ஆயிரத்து 500 ரூபாவை வழங்கியுள்ளன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் டி. விஜயகுமார் மானிப்பாய் கோவில் பற்று லயன்ஸ் கழகத் தலைவரிடம் இந் நிதியை ஒப்படைத்தார்.

## திருத்த வேலைக்கு திருமலை சென்ற தராகி கப்பல் நாளை காங்கேசன் திரும்பும்?

திருகோணமலை, ஓகஸ்ட் 21

திருத்த வேலைக்காகத் திருகோணமலை சென்ற 'தராகி' கப்பல் நாளை காங்கேசன்துறை திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது

காங்கேசன்துறைக்கும் - மன்னாருக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த இக்கப்பலின் ஓர் இயந்திரம் பழுதடைந்ததால் இக் கப்பல் திருகோணமலைக்குச் சென்றிருந்தது

இந்தக் கப்பலின் திருத்த வேலைகளுக்குத் தேவையான பொருள்கள் நேற்றுத் திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டதாகவும் —

திருத்த வேலையை முடித்து அக்கப்பல் நாளை காங்கேசன்துறைக்கு வந்து சேவையை ஆரம்பிக்கும் என்றும் — திருகோணமலையில் தெரிவிக்கப்பட்டது. (இ-150-3)

## ஆஸ்பத்திரிக்கு மருந்து

யாழ். போதனா வைத்திய சாலையில் பாவனைக்கான மூன்றாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளில் ஒரு பகுதி நோயாளர் சேவைக்கான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டது.

இம்மருந்து வகைகளில், சேலைன், டெக்ஸ்றோஸ் ஆகியவைகளே அதிக அளவில் எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-15)

## குடாநாட்டில் இடம் பெற்ற சம்பவங்கள் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் சம்பவங்கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. விவரம் வருமாறு:

★ காலை 11.00 மணியளவில் பாதுகாப்புப் படையினர் கொக்குவில் பகுதியில் விடுதலைப் புலிகளின் குழு ஒன்றை எதிர் கொண்ட போது ஒரு புலி உறுப்பினரைக் கொன்றதுடன் மற்றும் சிலருக்குக் காயங்களை ஏற்படுத்தினர். பின்னர் இறந்தவரின் உடல் ஒன்றையும் உள்ளூர் தயாரிப்புக் கைக் குண்டுகள் மூன்றையும் இரண்டு சயனைட் குப்பிகளையும் படையினர் கண்டெடுத்தனர்.

★ காலை 11.45 மணியளவில் வாதரவத்தைப் பகுதியில் இருவர் 'ஜொனி' மிதிவெடியைக் கையாண்டு கொண்டு இருந்த போது அந்த மிதிவெடி வெடிக்கவே அவர்களில் ஒருவரான சின்னராஜா ரஜீவன் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்; சிங்கம் ஐயங்கண்ணை என்பவர் காயமடைந்து யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

★ பிற்பகல் 2.00 மணியளவில் வேலணையில் படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து மரமொன்றுக்குக் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு டாங்கி எதிர்ப்புக் கண்ணி வெடிகளைப் படையினர் மீட்டுள்ளனர். [இ-10)

## ஷெல்லுக்கு சிறுவன் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 21

கடலோரத்தரவைப் பகுதியில் கிடந்த ஷெல் ஒன்றை எடுத்துக்குத்திப்பார்த்த போது அது வெடித்துச் சிதறியதில் குத்திப்பார்த்தவர் அவ்விடத்திலேயே உடல்சிதறி மரணமானார்.

வாதரவத்தைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் வாதரவத்தையைச் சேர்ந்த சின்னராசா ரஜீவன் (வயது 13) என்ற சிறுவனே மரணமானவராவார்.

இவருடன் கூட இருந்த சிறுவன் தெய்வாதீனமாகக் காயமின்றித் தப்பிக் கொண்டார்.

இரு சிறுவர்களும் உப்பு அள்ளச் சென்ற சமயமே இச் சம்பவம் இடம்பெற்றது.

அச்சுவேலி பொலீஸாரின் உதவியுடன், மரண விசாரணை அதிகாரி பாலகிருஷ்ணன் மேற்கொண்ட மரண விசாரணையை அடுத்து சடலம் உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. (இ-15)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்
## கண்ணீரில் நனையும் கந்தன்

வாளோடு விளையாடும் சங்கிலி மண்ணில் - முருகன்
வள்ளி தெய்வானையோடு நல்லையில்
வதிகின்றான்
நாளோடும் பொழுதோடும் நல்லவைகள் மலர்ந்திட
முருகன்
அருளோடும் அழகோடும் வீதியில் வருகின்றான்
பாவோடும் தேனோடும் பன்னீரில் நனைந்தவன் -
தமிழர்
பட்டதுயர் கண்டு கண்ணீரில் நனைகின்றான்
வேரோடும் தமிழோடும் விளையாடும் முருகன் -
நாளை
விடிபொழுதில் [illegible]
நல்லை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

**ஆவணி 6**

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தி
முற்பகல் 8 04 வரை.
பஞ்சமி
வைகறை 5.33 வரை.
நட்சத்திரம்: ரேவதி
முன்னிரவு 8.10 வரை.
சுபநேரம்: 6.05 -7 35
ராகுகாலம்: 10.35-12.05
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## விடைத்தாள் பகுப்பாய்வு கலந்துரையாடல்

வலிகாமம் தெற்கு, ஓக. 21

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளில் இரண்டாம் தவணை நடைபெற்ற பரீட்சைகளின் விடைத்தாள் பகுப்பாய்வு கலந்துரையாடலும், செயலமர்வும் இன்று முதல் நான்கு நாள்கள் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற உள்ளன.

விடைத்தாள்கள், பகுப்பாய்வுகள், அறிக்கைகள், சதுரக் கோட்டுத்தாள் கொப்பி, அடிமட்டம் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை அங்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

## சுவாமி...

(முதலாம் பக்கத் தொடர்)

வேண்டும் என்றும் —

அபராதத் தொகையைக் கட்டத்தவறினால் மேலும் 32 வருடம் 9 மாதத்துக்கு கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும்— தமது தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஆச்சிரம வாசிகளை ஏமாற்றியதற்காக மேலும்ஓராண்டு கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கற்பழிப்பு வழக்கில் சம்பந்தப்பட்டதற்காகவும், சாட்சியங்களை கலைத்ததற்காகவும் மற்றும் ஆறு பேருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

பிரேமானந்தாவின் நெருங்கிய நண்பரான கமலானந்தாவுக்கு ஆயுள் தண்டனையும் 12 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

கற்பழித்தமையால் கருவுற்ற ஆச்சிரமப் பெண்களுக்குக் கருச்சிதைவு செய்த கமலானந்தாவின் மனைவி டாக்டர் சந்திராதேவிக்கு 2 ஆண்டுகள் 7 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், அவரது சிறைத் தண்டனை நேற்றுடன் முடிவடைந்ததால் 15 ஆயிரம் ரூபா அபராதம் கட்டியதும் நீதிபதி அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

குற்றவாளிகள் 7 பேரிடமும் வசூலிக்கப்படும் அபராதத் தொகையிலிருந்து கற்பழிக்கப்பட்ட மற்றும் மானபங்கப்படுத்தப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் 5 இலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்றும் நீதிபதி திருமதி பானுமதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் பாலன், மயில்வாகனன், சந்தகுமார், சதீஸ் ஆகிய 4குற்றவாளிகளுக்கும் ஆயுள் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது.

ஆச்சிரமத்தில் தங்கியிருந்த பெண்கள், தாங்கள் கற்பழிக்கப்பட்டதாக ஆங்கில தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்ததையடுத்து இந்தப் பரபரப்பான விஷயம் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மத்தியில் வெளியுலகுக்குத் தெரிய வந்தது

இதையடுத்து அதே ஆண்டு நவம்பரில் பிரேமானந்தா கைது செய்யப்பட்டார்.

ஆச்சிரமப் பெண்களை கற்பழித்ததாகவும், தமது நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்ட ரவி என்பவரைக் கொலை செய்யத் தூண்டியதாகவும் — பிரேமானந்தா மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இதுவரை நடந்த 50 க்கு மேற்பட்ட விசாரணைகளில் அரசு தரப்பில் சுமார் 60 சாட்சிகளும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் 65 சாட்சிகளும் விசாரிக்கப்பட்டனர்.

வழக்கு விசாரணையின் முடிவைப் பார்க்க ஏராளமானவர்கள் நேற்று நீதிமன்றத்தில் கூடியிருந்தனர். (இ-3-5)

## ஊர்காவலர் இருவர் காயம்

அம்பாறை மத்திய முகாம் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 ஊர்காவலர் காயமடைந்தனர். [இ-21-3]


ஊர்காவற்றுறை

# இன்னிசை நற்செய்தி பெருவிழா!

உலகப் பிரசித்தி பெற்ற பாடகர்
பிரசங்கியார்

## அருட்தந்தை பேர்க்மன்ஸ்
அவர்கள்

இடம்: எபநேசர் மண்டபம் [ஊர்காவற்றுறை]
நாள்: ( 23 - 08 - 97 ) சனிக்கிழமை.
நேரம்: காலை 10. 00 மணிக்கு.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[ பிரவேசம் இலவசம் ]

[ சி/1344 ]



# ஆரோக்கிய மழை

(Sound of Peace – சமாதான தொனி)

முன்பு அறிவிக்கப்பட்டபடி 24-08-97 (ஞாயிறு) அன்று காலை 9-30 மணிக்கு நடைபெறவிருந்த ஐக்கிய ஆராதனை நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம்.

- இணைப்பாளர்

462, பிரதான வீதி,
சுண்டுக்குளி.

(49112)



# மனையியற் கண்காட்சி

இடம்:- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்:- 22 - 08 - 97
வெள்ளிக்கிழமை காலை 9-00மணி முதல்
23 - 08 - 97
சனிக்கிழமை மாலை 5-00 மணி வரை.
புதிய வகுப்புகள் ஆரம்பம்: 25-08-97
திங்கள் மாலை 2 00 மணி.

தையல், சமையற் பாகம், பூவேலை, கைப்பணி,
துணியில் வர்ணம் தீட்டுதல் (பப்றிக் பெயின்ரிங்)
மணமகன் அலங்காரம், கோலம்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்.

(49121)



உ

சுதுமலை

## ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய
தர்மகர்த்தா சபை

# முக்கிய அறிவித்தல்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட வெளிச் சுற்றுப் பிரகாரத்தின் மேற்குப் பக்கத்திலுள்ள அம்மன் (தங்குசங்களை — வற்றாப்பளை) ஆலயத்தின் தேவைகளுக்கென்று கூறி, தவறான பிரசாரஞ் செய்து, தனிப்பட்ட சிலர் பணமாகவும் பொருள்களாகவும் தன் விச்சையாகச் சேகரித்துள்ளனர் என்ற தகவல் தர்மகர்த்தா சபைக்குக் கிடைத்துள்ளது. இவ்வாறான ஒழுங்கற்ற செயற்பாடுகளுக்குத் தர்மகர்த்தாசபை எவருக்கும் அதிகாரம் வழங்கவில்லை என்றும் வரம்பு மீறிய இச் செய்கைகளுக்கு ஆதரவு வழங்கவேண்டாம் என்றும் இத்தால் சகல அம்பாள் அடியார்களுக்கும் அறியத்தருகிறோம்.

பணமாகவோ அன்றிப் பொருள்களாகவோ நன்கொடை வழங்க விரும்பும் அடியார்கள், தர்மகர்த்தா சபைப் பொருளாளரிடமோ அல்லது பிரதம குருக்களிடமோ கொடுத்துப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தலைவர்
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி
அம்மன் ஆலய தர்மகர்த்தாசபை

(47389)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 21-08-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# இலங்கை மீண்டும் வெற்றி!

கொழும்பு, ஓக: 21

இலங்கை—இந்திய அணிகளுக்கு இடையேயான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று கொழும்பு பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற 2 ஆவது போட்டியில் இந்திய அணியை இலங்கை அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தால் வென்றது.

இந்திய அணி 49.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கங்கூலி 113 ஓட்டங்களைப் பெற்றார். பதிலளித்து ஆடிய இலங்கை அணி 41.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 241 ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பில் 66 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுகளையும் பெற்ற சனத் ஜயசூரிய ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (இ-10)

# மேலும் 9 டாக்டர்கள் நேற்று யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஓக: 21

வடபகுதி வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்காக அனுப்பிவைக்கப்பட்ட டாக்டர்களில் மேலும் ஒன்பது பேர் நேற்று விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

6 ஆண் டாக்டர்களும், 3 பெண் டாக்டர்களும் இதில் அடங்குவர்.

இவர்களில் மூவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும், அறுவர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவைச் சேர்ந்த ஏனைய வைத்தியசாலைகளிலும் பணியாற்றவுள்ளனர்.

இவர்களுடன் இது வரை 22 டாக்டர்கள் வடபகுதியில் பணி புரியவந்துள்ளனர். (இ-15)

## இரண்டாம் ..

(முதலாம் பக்கத் தொடர்)

ம்புலன்ஸ் வாகனங்கள் வவுனியா ஊடாகச் சென்ற வண்ணம் இருந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

இரு நாள் மோதல்களிலும் காயமடைந்த 205 படையினர் அநுராதபுரம், கொழும்பு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முதல் நாளான செவ்வாயன்று இடம்பெற்ற மோதலில் 29 படையினர் கொல்லப்பட்டனர் என்றும்—

காயம் அடைந்த ஆறு அதிகாரிகளும் 58 படையினரும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும்—

புலிகள் தரப்பில் 130 பேர் கொல்லப்பட்டனர் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

ஆனால் இரண்டாவது நாளான நேற்று இடம்பெற்ற இழப்புக் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

(இ-3-10-21-164)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்கள் நேற்று திருகோணமலை நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

கைதான 17 பேரில் ஒருவர் தொடர்பான விசாரணை முடியவில்லை என்று பொலீஸார் தெரிவித்ததையடுத்து, அவரை மட்டும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு ஏனையோரை நீதிவான் விடுதலை செய்தார். (இ-150-3)

## நூற்றுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்)

பில் பலியானோரின் எண்ணிக்கையைக் குறைத்துக் கூற முயற்சிக்கிறது. அதே போல் விடுதலைப் புலிகளும் தமது தரப்பில் பலியானோரின் எண்ணிக்கையைக் குறைத்துக் கூற முற்படுகின்றனர்.

விடுதலைப் புலிகள் இராணுவத்துக்குச் சொந்தமான நான்கு யுத்த டாங்கிகளைச் சேதமாக்கியுள்ளனர். ஒரு கவச வாகனத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

2 யுத்த டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இரண்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

இந்த இரு யுத்த டாங்கிகளில் இருந்தும் பாகங்கள் விடுதலைப்புலிகளால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த் தாக்குதல் காரணமாக புளியங்குளம் நகரைக் கைப்பற்றும் நடவடிக்கை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது எனக் கூறமுடியாது ஆனால் படையினரின் முன்னேற்றத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றே கூறலாம்.

போர்க்களத்தில் இருந்து வரும் சத்தங்கள் தற்போது குறைந்துள்ளன முன்னரிலும் பார்க்க விமானத் தாக்குதல்கள் குறைவாகவே உள்ளன.

அப்பகுதியில் இருந்து அம்புலன்ஸ் வாகனங்கள் தென்பகுதியை நோக்கி வருவதைக் கொண்டும் —

இப்பகுதியில் இருந்து (வவுனியாவில்) போர்க்களத்தை நோக்கிச் செல்லும் வாகனங்களும், விநியோகங்களும் குறைந்திருப்பதைக் கொண்டும் — இராணுவ நடவடிக்கை முற்றாக நிறுத்தப் பட்டுள்ளது என்பதை விட இராணுவ நடவடிக்கைக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது எனக் கூறமுடியும்.

பெருந்தொகையிலான ரவைகள் விடுதலைப் புலிகளிடம் சிக்கவிருந்த வேளையில் அவை இராணுவத்தினரால் அழிக்கப்பட்டன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர், இப்படி அவர் கூறினார். (இ;10)

## யெகோவா மாவட்ட மாநாடு

யாழ்ப்பாணம், ஓக. 21

யெகோவாவின் சாட்சிகளின் தமிழ் மாவட்ட மாநாடு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்திருக்கும் இலங்கை இளம் கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

''கடவுளுடைய வார்த்தையில் விசுவாசம்'' என்ற கருப்பொருளின் தலைப்பில் நடைபெறும் இந்த மாநாடு தினமும் காலையில் 9.30 மணிக்கு ஆரம்பமாகும். ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகளில் முக்கிய நிகழ்ச்சியாக முற்பகல் 11.30 மணிக்கு ''கண்களைத் தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்ற தலைப்பிலான நாடகமும், அன்று பிற்பகல் 1.50 மணிக்கு ''விசுவாசமும் உங்கள் எதிர்காலமும்'' என்ற தலைப்பில் பொதுப் பேச்சும் இடம்பெறும் (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்)

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேசமயம் மன்னார் பிரதேச செயலரின் உத்தியோக பூர்வ வாகனம் நேற்றுப் பிற்பகல் ஆயுதம் ஏந்திய குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் செல்வி எஸ். கணபதிப்பிள்ளையின் உத்தியோக பூர்வ வாகனமே நேற்றுக் காலை கடத்தப்பட்டது.

அவரது அலுவலகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இந்த வாகனத்தை இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

## கிபிர் விமானங்...

(முதலாம் பக்கத் தொடர்)

இரண்டாவது விமான மோட்டி பிரதான விமானத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் தொடுக்கப்படுவதை அவதானித்து விமானமோட்டியை எச்சரிக்கை செய்தார்.

இதையடுத்து முதலாவது விமானத்தின்விமானமோட்டி புலிகளின் ஏவுகணையைத் தடுத்து அழிக்கும் ஏவுகணையை விடுத்தார்.

விமானமோட்டியின் ஏவுகணை ஆகாயத்தில் புலிகளின் 'ஸ்ரிங்கர்' ஏவுகணையை இடைமறித்து அழித்தது.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஸ்ரிங்கர் ஏவுகணைகள் விமானத்தின் வெப்பப் பாதையை மோப்பம் பிடித்து குறி வைக்கும் திறன் கொண்டவை ஆகும். (இ-3)

## புலிகளின் நடமாட்டம் இல்லை

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்ற சிலரின் குற்றச்சாட்டுக்கு மத்திய அரசிடம் எந்த ஆதாரமும் இல்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் இதனை அவர் கூறினார். (இ-3)

## உப்பு அள்ளியதாக வழக்கு

கோப்பாய்ப் பகுதியில் சட்டவிரோதமாக உப்பு அள்ளினார்கள் என்று தெரிவிக்கப்பட்டு, கோப்பாய் பொலீஸாரால், ஆறு பேர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ் நீதிபதி ஏ. எஸ். இராமச்சந்திரன் முன்னிலையில் வழக்கெடுக்கப்பட்ட போது மேற்படி ஆறு பேரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். [இ-15]

## விதை நெல்

வட்டுக்கோட்டை ஓக. 21

தொல்புரம் சமநல சேவை நிலையத்துக்குக் கிடைக்கப்பெற்ற 600 புசல் விதை நெல், விவசாய சம்மேளனங்களின் சிபார்சுக்கமைய விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அதே சமயம் உள்ளூர் இன விதை நெல் ஒரு புசல் 750 முதல் 800 ரூபாவாக விவசாயிகளால் விற்பனை செய்யப்படுகிறது. (இ-12)

## சுதுமலையில் 2 இளைஞர்கள் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 21

ஊரடங்குநேரம் அதிகாலை 3. 25 மணிக்கு — வீதியில் காணப்பட்டனர் என்று கூறப்படும் இருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

சுதுமலை வடக்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் ரமேஷ் (வயது 18). மகாலிங்கம் உதயகுமார் (வயது 24) ஆகிய இருவருமே மரணமானவர்களாவர்.

இரு சடலங்களும் சுன்னாகம் பொலீஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சடலங்கள் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன. (இ-15-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org